அனுப்புநர்

ச.சீனிவாசன்,
துணை இயக்குநர்(ப.தே)(பொ)
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண். 101888 /டி(3)/2022 நாள் : 06 . 09.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022 – பதிவேற்றம் செய்யப்பட்ட பள்ளி மாணவர்கள் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் மற்றும் சுருக்கறிக்கை பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளமை தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. இதே எண்ணிட்ட இவ்வலுவலக செய்திக்குறிப்பு நாள்: 04.08.2022.
2. இதே எண்ணிட்ட கடிதம் நாள்: 24.08.2022.

*****

பார்வை 1–ல் காணும் செய்திக்குறிப்பில் 2022–2023ம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் (CBSE/ICSE/ உட்பட) பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் 01.10.2022 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

பார்வை 2–ல் காணும் கடிதத்தில் தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்விற்கு விண்ணப்பங்களை online–ல் பதிவேற்றம் செய்ய 25.08.2022 முதல் 09.09.2022 மாலை 6.00 மணி வரை கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்விற்கான இணையவழியாக தேர்வுக்கட்டணம் (Online Payment) (06.09.2022 முதல் 10.09.2022 மாலை 6.00 மணி வரை) செலுத்துவதற்கும், சுருக்கறிக்கையை (Summary Report) பதிவிறக்கம் செய்வதற்கும் 06.09.2022 முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்துவகை மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
துணை இயக்குநர் (ப.தே)(பொ)

நகல்

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.